1993 ஏப்ரல் 23]

460—

காவேரிப்பட்டணம் தொகுதியில் சிறு தொழிற்கூடங்கள் கட்டுதல்.

*16030—திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தொழில்துறையில் பின்தங்கிய காவேரிப்பட்டணம் தொகுதியில் சிறு தொழிற்கூடங்கள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10–50

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் பல மாண்புமிகு உறுப்பினர்கள் இதை யொத்த கேள்வியை கேட்டபோது தொழில் முனைவோர் முன் வருவார்கள் என்று சொன்னால் அங்கே தொழில் கூடங்களை இந்த அரசு அமைக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் என் தொகுதியில் தொழில் முனைவோர் பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வழங்க உள்ளேன். எனவே, இந்த நிதியாண்டில் இதை பரிசீலனை செய்து என் தொகுதியில் இந்தத் தொழில் கூடங்களை அமைக்க முன்வருவாரா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் சிட்கோ தொழில் பேட்டைகள் உள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை மனுக்களோடு விண்ணப்பிப்பார்களேயானால் சிட்கோ அதற் குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் தொழில் துறையில் முன்னேறிய பகுதியாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால் கிருஷ்ணகிரி பகுதியின் அருகிலுள்ள காவேரிப்பட்டிணத்தில் எந்த வகையிலும் ஒரு தொழிற்

சாலைகூட இல்லை. இருந்தாலும் பல தொழில் முனைவர்கள், என்னுடைய காவேரிப்பட்டிணம் தொகுதியிலிருந்துதான் பல இடங்களில், வேறு இடங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி சொந்த நிலத்திலேயே அவர்கள் தொழிற் கூடங்களை கட்டுவதற்குரிய ஒரு வாய்ப்பினை செய்து தர இதற்கு முந்தைய அரசுகள் முன் வரவில்லை. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அரசு நிலமும் கிட்டத்தட்ட 30 ஏக்கர் இருக்கிறது. எனவே, முனைவோர் பட்டியலைக் கொடுக்கிறேன். இந்த நிதியாண்டில் இதைக் கொடுக்க முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டம், கொளுப்பள்ளியில் சுமார் 86.84 ஏக்கர் அரசு நிலத்தினை சிட்கோவுக்கு அரசு அளிக்க முன்வந்துள்ளது. அங்கே ஒரு தொழில்பேட்டை அமைக்க சிட்கோ உத்தேசித்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய காவேரிப்பட்டிணத்தில்தான் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இங்கு தொழில்பேட்டை அமைக்கப்படுமானால் காவேரிப் பட்டிணம் தொழில் முனைவோர்களுக்கு உதவிகரமாக இருக்கும் பட்சத்தில், 10 தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டத்துடன் முன் வருவார்களேயானால், 25 சதவிகிதம் விளிம்பு தொகையோடு அவர்கள் அந்த மனுக்களை விண்ணப்பிப்பார்களானால் சிட்கோ தகுந்த நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வாங்கி தொழில்பேட்டையினைத் துவங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 441, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

441—

அரியலூரில் குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடுதல்.

*10443— டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்கு மூளைக்காய்ச்சல் ஏற்படுவதைத் தடுக்க தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றம் LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS